தமிழ் விக்கிப்பீடியாவிற்கு வருக,

யாவராலும் தொகுக்கப்படக் கூடிய ஒரு கட்டற்ற கலைக்களஞ்சியம்.
தமிழ்க் கட்டுரைகள்: 1,29,930

முதற்பக்கக் கட்டுரைகள்



பாக்ஸ் மங்கோலிகா எனும் பதத்திற்கு லத்தீன் மொழியில் “மாங்கோலிய அமைதி” என்று பொருள். இது ***பாக்ஸ் டாடரிகா*** என்றும் அழைக்கப்படுவதுண்டு. “இது அசல் பதமான *பாக்ஸ் ரோமனா*விலிருந்து உருவானது. 13 வது மற்றும் 14 ஆம் நூற்றாண்டுகளில் மங்கோலியப் படையெடுப்புகளால் யூரேசியப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்களின் சமூக, கலாச்சார, மற்றும் பொருளாதார வாழ்க்கையில் ஏற்பட்ட நிலைத்தன்மையை இது குறிக்கிறது. இந்தப் பதமானது ஒன்றுபட்ட நிர்வாகத்தால் உருவான எளிதாக்கப்பட்ட தகவல் தொடர்பு, வர்த்தகம் மற்றும் மங்கோலியர்களின் வெற்றிகளைத் தொடர்ந்து அதன் விளைவாக பரந்த நிலப்பரப்பில் ஏற்பட்ட அமைதியான காலம் ஆகியவற்றைப் பற்றி விவரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. **மேலும்...**



இசுலாமுக்கு முந்திய அரேபியாவின் சமயம் என்பது அரேபியாவில் இசுலாம் சமயம் தோன்றுவதற்கு முன்னர் அராபியத் தீபகற்பத்தின் அரேபிய மக்கள் பல கடவுள் வணக்க முறை, யூதம், கிறித்தவம் மற்றும் பாரசீக சொராட்டிரம் போன்ற சமய முறைகளைப் பின்பற்றினர் என்பதையும் அவர்களின் இசுலாம் அல்லாத சமய நம்பிக்கைகளைப்பற்றிக் குறிப்பிடுவதாகும். ஆரம்பத்தில், அரேபியாவின் பல கடவுள் வணக்க முறையில் தேவதைகள் மற்றும் புனித ஆவிகளை வணங்கினர். அரேபியர்கள் ஹெஜாஸ் பகுதியில், குறிப்பாக மெக்காவில் உள்ள காபாவில் வைத்து வழிபட்ட பெண் தேவதைகளில் முக்கியமானவைகளாக அல்-லாத், அல்-உஸ்ஸா மற்றும் மனாத் காணப்பட்டன. **மேலும்...**

மேலும் கட்டுரைகள்...

உங்களுக்குத் தெரியுமா?

- **நாட்டு நாய்** (படம்) என்பது இந்திய துணைக் கண்டத்தில் இயற்கையாக காணப்படும் நாய் இனமாகும். இதன் பாரம்பரியம் 4,500 ஆண்டுகளுக்கு முன் செல்கிறது.
- **பாபிரசு** பண்டைய எகிப்தில், கிமு நான்காம் ஆயிரமாண்டில், நைல் ஆற்றின் கழிமுகத்தில் சதுப்பு நிலத்தில் விளையும் பாபிரஸ் எனும் நாணல் போன்ற செடிகளின் தண்டுகளைப் பிழிந்தெடுத்த வெள்ளைப் பசை போன்ற கூழிலிருந்து தயாரிக்கப்படும் தடித்த காகிதம் போன்ற எழுதுபொருளாகும்.
- **உயிர்ப்பாலம்** என்பது மேகாலயாவின் தென் பகுதியில் உயிருள்ள மரங்களின் விழுதுகளைக் கொண்டு படிப்படியாக இயற்கையான முறையில் அமைக்கப்படும் பாலங்களாகும்.

செய்திகளில்



- **சூன் 21 வலய கதிரவ மறைப்பு** (படம்) உலகின் பல பாகங்களில் தென்பட்டது.
- இலங்கை நாடாளுமன்றத்திற்கான தேர்தல் 2020 ஆகத்து 5 இல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.
- உருசியாவில் நோரில்சுக் நகரில் பெரும் எண்ணெய்க் கசிவு ஏற்படுத்ததை அடுத்து நாட்டில் அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டது.
- ஆம்பன் புயல் கிழக்கிந்தியப் பகுதிகளிலும், வங்காளதேசத்திலும் பெரும் சேதங்களை ஏற்படுத்தியது. நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர், நான்கு மில்லியன் மக்கள் வரை இடம்பெயர்ந்தனர்.
- கொரோனாவைரசுத் தொற்று ஒரு உலகளவில் பரவும் தொற்று என உலக சுகாதார அமைப்பு அதிகாரபூர்வமாக அறிவித்தது.

இன்றைய நாளில்...



சூலை 21: சிங்கப்பூர் - இன நல்லிணக்க நாள்

- 1925 – அமெரிக்காவில் டென்னிசி மாநிலத்தில் உயர்நிலைப் பள்ளி ஒன்றில் படிவளர்ச்சிக் கொள்கையை வகுப்பில் கற்பித்தமைக்காக ஆசிரியர் ஒருவருக்கு $100 தண்டம் அறவிடப்பட்டது.
- 1954 – ஜெனீவா மாநாட்டில் வியட்நாம் வடக்கு வியட்நாம், தெற்கு வியட்நாம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டது.
- 1964 – சிங்கப்பூரில் மலாய் மற்றும் சீனர்களுக்கிடையே கலவரம் மூண்டதில் 23 பேர் உயிரிழந்து பலர் காயமடைந்தனர்.
- 1969 – **நீல் ஆம்ஸ்ட்ராங்** (படம்) சந்திரனில் நடந்த முதல் மனிதர் என்ற புகழைப் பெற்றார்.
- 1972 – வட அயர்லாந்து தலைநகர் பெல்பாஸ்ட்டில் ஐரியக் குடியரசுப் படையினர் நடத்திய 22 தொடர் குண்டுவெடிப்புகளில் 9 பேர் கொல்லப்பட்டு 130 பேர் காயமடைந்தனர்.
- 2008 – ராம் பரன் யாதவ் நேப்பாளத்தின் முதலாவது குடியரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.*2011 – நாசாவின் விண்ணோடத் திட்டம் அட்லாண்டிசு தரையிறங்கியதுடன் நிறைவு பெற்றது.

வேதநாயகம் பிள்ளை (இ. 1889) · **எஃப். எக்ஸ். சி. நடராசா** (பி. 1911) · **சிவாஜி கணேசன்** (இ. 2001)
அண்மைய நாட்கள்: சூலை 20 – சூலை 22 – சூலை 23

தொகுப்பு

சிறப்புப் படம்

அரராத் மலை துருக்கியில் உள்ள மிக உயரமான மலையாகும். எரிமலைக் கூம்பான இம்மலை துருக்கியின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ளது. இது ஆர்மேனியா நாட்டின் எல்லைக்கு 32 கி.மீ. தெற்காகவும், ஈரான் எல்லைக்கு 16 கீ.மீ. மேற்காகவும் அமைந்துள்ளது.

படம்: *Serouj Ourishian*

தொகுப்பு · சிறப்புப் படங்கள்

- **சமுதாய வலைவாசல்** – திட்டம்பற்றித் தெரிந்துகொள்ள, நீங்கள் என்ன செய்ய முடியும், தேவையானவற்றை எங்கு தேட முதலியவற்றை அறிய.
- **உதவி** – விக்கிப்பீடியாவைப் பயன்படுத்துவது தொடர்பான வினாக்களைக் கேட்க.
- **தூதரகம்** – தமிழ் தவிர்த்த பிறமொழிகளில் விக்கிப்பீடியா குறித்த தொடர்பாடல்கள்.
- **ஆலமரத்தடி** – விக்கிப்பீடியாவின் கொள்கை விவாதங்களும் தொழில்நுட்ப விவாதங்களும் குறித்து உரையாட.
- **புதியன** - விக்கிப்பீடியாவின் புதிய கட்டுரைகள்.

விக்கிமீடியாவின் பிற திட்டங்கள்

விக்கிப்பீடியா வணிக நோக்கற்ற விக்கிமீடியா நிறுவனத்தால் வழங்கப்படுகிறது. இந்நிறுவனம் மேலும் பல பன்மொழித் திட்டங்களைச் செயல்படுத்துகிறது:

விக்சனரி (https://ta.wiktionary.org/)
அகரமுதலியும் சொல்லடைவும்

விக்கிசெய்தி (https://ta.wikinews.org/)
கட்டற்ற உள்ளடக்கச் செய்தி

விக்கிநூல்கள் (https://ta.wikibooks.org/)
கட்டற்ற நூல்களும் கையேடுகளும்

விக்கிமூலம் (https://ta.wikisource.org/)
கட்டற்ற உள்ளடக்க நூலகம்

விக்கிமேற்கோள் (https://ta.wikiquote.org/)
மேற்கோள்களின் தொகுப்பு

பொதுவகம் (https://commons.wikimedia.org/)
கட்டற்ற ஊடகக் கிடங்கு

விக்கித்தரவு (https://wikidata.org/)
கட்டற்ற அறிவுத் தளம்

விக்கிப்பல்கலைக்கழகம் (https://en.wikiversity.org/)
கட்டற்ற கல்வி நூல்களும் செயற்பாடுகளும்

விக்கியினங்கள் (https://species.wikimedia.org/)
உயிரினங்களின் தொகுதி

விக்கிப்பயணம் (https://en.wikivoyage.org/)
இலவச பயண வழிகாட்டி

மீடியாவிக்கி (https://mediawiki.org/)
விக்கி மென்பொருள் மேம்பாடு

மேல்-விக்கி (https://meta.wikimedia.org/)
விக்கிமீடியா திட்ட ஒருங்கிணைப்பு

விக்கிப்பீடியா மொழிகள்

இந்த விக்கிப்பீடியா தமிழில் எழுதப்பட்டுள்ளது. 2003-இல் தொடங்கப்பட்டது, தற்போது 1,29,930 கட்டுரைகள் உள்ளன. மேலும் பல விக்கிப்பீடியாக்கள் உள்ளன; அவற்றுள் மிகப்பெரியன கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

- 10,00,000 கட்டுரைகளுக்கு மேல்: English · Deutsch · español · français · italiano · Nederlands · 日本語 · polski · русский · svenska · Tiếng Việt

- 2,50,000 கட்டுரைகளுக்கு மேல்: العربية · Bahasa Indonesia · Bahasa Melayu · català · čeština · euskara · فارسی · 한국어 · magyar · norsk · português · română · српски / srpski · srpskohrvatski / српскохрватски · suomi · Türkçe · українська · 中文
- 50,000 கட்டுரைகளுக்கு மேல்: bosanski · български · dansk · eesti · Ελληνικά · Simple English · Esperanto · galego · עברית · hrvatski · latviešu · lietuvių · norsk nynorsk · slovenčina · slovenščina · ไทย

விக்கிப்பீடியாக்களின் முழுமையான பட்டியல்

"https://ta.wikipedia.org/w/index.php?title=முதற்_பக்கம்&oldid=2992950" இருந்து மீள்விக்கப்பட்டது

அனைத்துப் பக்கங்களும் படைப்பாக்கப் பொதுமங்கள் அனுமதியுடன் பகிரப்பட்டுள்ளன; கூடுதலான கட்டுப்பாடுகளுக்கு உட்படலாம்.